Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# தென் இந்திய ஆலயச் சிற்பங்களில் இசைச் செய்திகள்

முருகையா துக்ஷ்யந்தன்,
விரிவுரையாளர்,இசைத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

8

ஆய்வுச் சுருக்கம்

தென் இந்திய ஆலயங்களில் காணப்படும் சிற்பங்கள் ஊடாக இசையின் முக்கியத்தவம் ஆராயப்பட்டுள்ளது. மன்னர்களால் உருவாக்கப்பட்ட ஆலயங்களில் எவ்வாறு இசையின் முக்கியத்துவம் காணப்படுகின்றது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. அத்தோடு ஆலயங்கள் கட்டப்பட்டுள்ள காலங்களும் ஆய்வில் உட்படுத்தப்பட்டுள்ளது.

சிற்பங்களின் ஊடாக முற்காலத்தில் மக்களிடையே எந்த வகையான வாத்தியங்கள் பயன்பாட்டில் உள்ளதும் எவ்வகையான வாத்தியங்கள் அருகி வந்துள்ளமை தொடர்பாகவும் இவ் ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. தெய்வங்கள் இசையில் வாத்தியங்களையும் பயன்படுத்தியுள்ளமையும் இவ் ஆய்வில் உட்படுத்தப்பட்டிருக்கின்றது.

திறவுச்சொற்கள். - இசை> சிற்பம்>வாத்தியங்கள்>ஆலயங்கள்>யாழ்

ஆய்வின் நோக்கம்

சிற்பங்கள் பெரும்பாலும் புராணங்கள் மற்றும் இதிகாசங்கள் தொடர்புடையனவாகவே இருக்கும். எனவேஃ சிற்ப ஆய்வுக்குப் புராணப் பின்புலம் அவசியம். தமிழ்நாட்டில் சிற்பக்கலை வளர்ச்சி என்பது கட்டடக் கலையைப் போலவே கலையை நேசித்த ஒவ்வொரு மன்னர் காலத்திலும் வளர்ந்து வந்துள்ளது. இவ்வகையான மன்னர்களால் உருவாக்கப்பட்டுள்ள ஆலயங்களிலும் மற்றும் அவர்கள் காலத்தில் எழுந்த ஆலயங்களிலும் சிற்பங்களால் தங்களின் வாழ்க்கை முறைகள் கலை ஈடுபாடுகளை வெளிப்படுத்தியுள்ளனர். இந்த வகை சிற்பங்களின் ஊடாக இசையின் வெளிப்பாடும் முற்காலத்தில் எவ்வகையான இசைக்கருவிகள் மற்றும் இசை பல்லியங்கள் நிபெற்றுள்ளன தொடர்பாக தற்கால சமூகத்திற்க வழங்கும் நோக்கமாக இவ் ஆய்வு ஆராயப்பட்டுள்ளது.

முகவுரை

சிற்பங்கள் பெரும்பாலும் புராணங்கள் மற்றும் இதிகாசங்கள் தொடர்புடையனவாகவே இருக்கும். தமிழ்நாட்டில் சிற்பக்கலை வளர்ச்சி என்பது கட்டடக்கலையைப் போலவே கலையை நேசித்த ஒவ்வொரு மன்னர் காலத்திலும் வளர்ந்து வந்துள்ளது. இராஜசிம்மர் காலத்தில் கருவறைப் பின்சுவரில் இருக்கும் சோமாஸ்கந்தர் சிற்பத்தொகுதியாகப் பரிணமித்தது. முதலாம் பராந்தகர் காலத்தில் உணர்ச்சிகள் குன்றாமல் உள்ளங்கையகலச் சிறு சிற்பத்தொகுதிக்குள் அடங்கின. பின்னர் முதலாம் இராஜராஜர் தொடர் சிற்பங்களாகப் புராண நிகழ்வுகளைக் காட்டும் சிற்பத்தொகுதிகளை அறிமுகப்படுத்தினார். இரண்டாம் இராஜராஜர் முந்தைய இரண்டு பாணிகளையும் கலந்து தாராசுரத்தில் பெரியபுராணக் காட்சிகளை வடித்து சிற்பக்கலையை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் சென்றார். அதன் பின்னர் வந்த நாயக்கர் காலத்தில் சிற்பங்கள் எதுவும் குறிப்பிடத்தக்க

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

மாற்றங்களைப் பெறவில்லை.

ஒவ்வொரு கோயிலிலும் எந்தெந்த சிற்பங்கள் எங்கெங்கு அமையவேண்டும் என ஆகம விதிகள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. இருப்பினும் கோயிலின் அளவையும்ää ஒவ்வொரு சுவரிலும் உள்ள கோட்டங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தும் இவ்விதிகள் மரபுக்குட்பட்டு மீறப்பட்டிருக்கும். உதாரணமாக>ஒரு சிவாலயத்தில் கருவறையின் தென்புறச்சுவரில் தட்சிணாமூர்த்தியும்> மேற்கில் லிங்கோத்பவரும்>வடக்கில் பிரம்மாவும் இருப்பது வழக்கம். ஆனால் தஞ்சை இராஜராஜீசுவரத்தில் இவ்விதிகள் பின்பற்றப்பட்டிருக்காது. ஏனென்று காரணம் தெரியவில்லை.

ஒவ்வொரு சிற்பத்தையும் வகைப்படுத்த அல்லது அடையாளப்படுத்த அவற்றின் மகுடம்>ஆடை அணிகலன்கள்> தரித்திருக்கும் ஆயுதங்கள்>கைகள் காட்டும் முத்திரைகள் மற்றும் உடல்>கால்> பாத நிலைகள் ஆகியவையே உதவும். ஒரு சிற்பம் எந்தக் காலகட்டத்தைச் சேர்ந்தது என்பதை அறிய அவற்றின் முகபாவங்கள்>உடலமைப்பு ஆகியவை உதவும். தமிழ்நாட்டிலிருக்கும் பல்லவர் மற்றும் சோழர் காலச் சிற்பங்களில் பரவலாகக் காணப்படும். தென் இந்திய ஆலயச் சிற்பங்களில் பெரும்பான்மையானவை இசைச் செய்திகளை காட்டி நிற்கின்றன. இந்த இசைச் செய்திகள் அந்தக்காலத்தில் வாழ்ந்த மன்னர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வகையான இசைச் செய்திகளைக் கூறும் சிற்பங்கள் மூலம் தற்கால சமூகத்தினது இசைத் தொடர்புகள் ஆராயப்பட்டுள்ளது.

**ஆலயங்களில் சிற்பங்கள்**

புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள திருமெய்யம் என்னும் ஊரில் அமைந்துள்ள சிவன் கோயிலில் இசை சிற்பத்தில் யாழின் உருவம் காணப்படுகின்றது இந்த ஆலயத்தில் பள்ளி கொண்ட பெருமாள் கருவறை சுவர் மீது ஓர் அழகிய யாழ் சிற்பம் காணப்படுகின்றது. அந்தச் சிற்பத்தில் நாரதர் யாழுடனும் தும்புரு வீணையுடனும் காட்சி அளிக்கின்றார் அடிப்பாகத்தில் படகு போன்ற அமைப்பு அதன் ஒரு புறத்தில் இருந்து தண்டும் காணப்படுகிறது. நாரதரின் இடது கை தண்டின் மீதும் வலது கை விரல்கள் தந்தியின் மீதும் காணப்படுகின்றன. இந்த சிற்பம் பல்லவ அரசன் மகேந்திரவர்மன் வாழ்ந்த காலமான (கிபி 600 – 630) காலப்பகுதியினை உடையதாகும். திருமெய்யம் ஆலயத்தில் உள்ள சிற்பத்தில் யாழ் இசைக்கருவியானது முற்காலத்தில் பயன்படுத்தப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

காஞ்சி கைலாசநாதர் கோயிலில் காணப்படும் இசைச் சிற்பங்கள் சிறப்பு பெறுகின்றன இக்கோயில் மகேந்திரவர்மனின் பேரன் ராஜசிம்மனால் கட்டப்பட்டதாகும். இக்கோயிலில் மூன்று விதமான தம்புராக்கள் உள்ளன அகப்பை கின்னரி என்னும் இசைக்கருவி ஒன்றும் கைலாசநாதர் கோயில் சுவரில் காணப்படுகின்றது. இதை ஒத்த அகப்பை கின்னரி வாத்தியமானது இராமேஸ்வரம் கோவிலில் ஒரு கின்னர மரத்தின் கிளையிலும் காணப்படுகின்றது.

திருஞானசம்பந்தர் பதிகம் பாடிய திருக்கோலக்காக் ஆலயத்தில் தாளக் கருவியை சிற்ப வடிவில் அமைத்திருக்கின்றனர். திருஎருக்கத்தம் புலியூரில் உள்ள ஆலயத்தில் திருநீலகண்ட யாழ்ப் பாணரின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. அவருடைய கையில் இருப்பது சகோட யாழ் என்று கருதப்படுகின்றது. புகழ்பெற்ற அந்த யாழ்ப்பாணர் இசைத்த யாழ் எப்படி இருந்தது என்பதை அந்த சிற்பத்தில் மூலமாக நாம் அறிய முடிகின்றது

மகாவலிபுர சிற்பங்களில் பல இசைக் காட்சிகள் காணப்படுகின்றன அங்குள்ள வராக மண்டபத்தில் சிவபெருமான் முன்பு ஒரு யாழ் காணப்படுகின்றது அங்கு வீணை அல்லது தும்புரு ஏந்திய நாரதரின் சிற்பம் காணப்படுகிறது. மாமல்லையில் உள்ள பாறைச் சிற்பங்களில் அர்ச்சுனன் தவசு சிற்பக்கட்டிடம் முக்கியமானது அதில் கின்னர்கள் யாழுடன் இருப்பதை காணலாம். குமரி மாவட்டத்தில் உள்ள சுசீந்திரம் ஆலய சிற்பங்களில் பலவிதமான இசைக்கருவிகளை காணலாம். குறிப்பாக மத்தளம்> பம்பை சண்டை குடமுழா போன்ற தோற்கருவிகள் பல்வேறு உருவ அமைப்புக்களுடன் காணப்படுகின்றன. கும்பகோணம் அருகில் உள்ள தாராசுரம் கோவிலில் இராமாயண சிற்பங்களும் காணப்படுகின்றன. அவற்றில் போர் முரசு பேரிகை முதலியவற்றை வாசிக்கும் காட்சிகள் செதுக்கப்பட்டுள்ளன.

குமரி மாவட்டத்தில் உள்ள திருவட்டாறு ஆதிகேசவ பெருமாள் கோவிலில் மேற்குப் பக்கம் இருக்கும் சித்திர மண்டபத்தில் வரிசையாக தூண்களில் பல சிற்பங்கள் காணப்படுகின்றன ஒரு தூணில் கண்ணன் குழலூதும் காட்சி மிகவும் பெரிய உருவாகச் செதுக்கப்பட்டுள்ளது. புல்லாங்குழலை எவ்வாறு பிடித்து வாசிப்பது என்பது அந்த சிற்பத்தில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. கண்ணனின் சிலைக்கு எதிர் வரிசையில் சிவபெருமான் ஊர்த்துவ தாண்டவம் ஆடும்போது நந்தி தேவர் குடமுழா வாசிக்கும் சிற்பமும் திருமால் இடக்கை என்ற தோற்கருவியை வாசிக்கும் சிற்பமும் காணப்படுகின்றது. அக்காலத்தில் என்னென்ன இசைக்கருவிகள் வாசிக்கப்பட்டுள்ளனவோ அவை சிற்பங்களாக ஆக்கப்பட்டிருக்கின்றன. கங்கைகொண்ட சோழபுரம் கோவில் கி பி 11ம் நூற்றாண்டைச் சேர்ந்தது அங்கு ஒரு சிற்பத்தில் ஓர் இசை குழுவையே பார்க்கலாம் அதில் யாழ்>குழல;> தாளம;> உடுக்கை> முழவு போன்ற இசைக்கருவிகள் இசைக்கப்படும் நிலையில் செதுக்கப்பட்டுள்ளன. அவை இசைக்கருவிகளின் அமைப்பு முறையாகும் எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த உத்தரமேரூர் கோவில் சிற்பத்திலும் யாழ் வாத்தியம் காணப்படுகிறது.

ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த கொடும்பாலூர் காஞ்சிபுரம் கோவில் சிற்பங்களில் உள்ள யாழ் கருவிகள் உருவில் சிறியதாய் அடிப்பகுதியில் குட அமைப்பு போன்று காணப்படுகிறது நீண்ட கம்பில் நரம்புகளை கட்டி இருப்பது போல் தோன்றுகின்றது யாழ் வீணையாக உரு மாறிக்கொண்டு இருந்த உண்மையை இங்கு அறியக் கூடியதாக உள்ளது. எட்டாம் நூற்றாண்டை சேர்ந்த நாமக்கல் சிற்பத்தில் உள்ள யாழ் மேல்நோக்கி வளைந்து படுக்கையாக வைக்கப்பட்டுள்ளது இது வில் யாழின் அமைப்பினைக் கொண்டு காணப்படுகின்றது. திருமெய்யம் கோயில் சிற்பத்தில் உள்ள யாழின் அடிப்பகுதி தட்டையாக விரிந்து காணப்படுகின்றது. 17ஆம் நூற்றாண்டை சேர்ந்த பட்டீஸ்வரம் கோவிலில் உள்ள சிற்பங்களில் காணப்படும் யாழ்களில் ஒன்றின் அடிப்பகுதி இலை போன்று விரிந்து

காணப்படுகின்றது. இவற்றில் இருந்து கால வளர்ச்சியால் யாழில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை காண முடிகின்றது. கிருட்டினாபுரம் கோவில் 16ஆம் நூற்றாண்டை சேர்ந்தது இதில் உள்ள சிற்பத்தில் தும்புருவுடன் நாரதரை காணலாம் 17ஆம் நூற்றாண்டை சேர்ந்த ஆவுடையார் கோவில் சிற்பத்தில் ஒரு பெண் யாழ் இசைப்பது பொறிக்கப்பட்டுள்ளது எனவே அக்காலத்தில் தமிழர்கள் யாழ் வாத்தியத்தை பயன்படுத்தி வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கும்பகோணத்தில் உள்ள கும்பேஸ்வரர் சுவாமி கோவிலில் உள்ள தூணில் இசைக்கருவிகள் ஈடுபவர்களில் ஒருவர் வலக்கையினால் சங்கு ஊதுகின்றார் மற்றவர் மேளம் அடிக்கின்றார் இடது கை மேளத்தை தாங்கியுள்ளது இதே கோயிலிலே யாழ் இசைக்கருவி பற்றிய சிற்பங்களும் காணப்படுகின்றன. இது பல்லவர் பாணியிலேயே காணப்படுகின்றது இது மீன் வடிவிலே இருப்பதினால் மகரயாழ்; என்றும் அழைக்கப்படுகின்றது சோழர் காலத்தைச் சேர்ந்த சிறந்த சிற்பங்கள் தொடக்கத்திலே தாராசுரம் கோயில்களிலும் சிதம்பர நடராஜர் ஆலயத்திலும் தஞ்சை பெருவுடையார் கோயிலிலும் கங்கைகொண்ட சோழபுரத்திலும் காணப்படுகின்றது திருப்பரங்குன்றம் கழுகுமலை முதலிய பாண்டிய கால குகை கோயில்களில் சிறந்த சிற்பங்கள் காணப்படுகின்றன சோழர்காலத்தைச் சேர்ந்த சிறந்த சிற்பங்கள் தொடக்கத்தில் தாராசுரம் கோயிலிலும் சிதம்பர நடராஜர் ஆலயத்திலும் தஞ்சை பெருவுடையார் ஆலயத்திலும் காணப்படுகின்றன.

மிருகத்தீஸ்வரர் ஆலயத்தில் உள்ள மூலஸ்தான கீழ் பகுதியில் நடன கலைஞர்களும் இசைக்கலைஞர்களும் சேர்ந்து வரிசையில் காணப்படுகின்ற சிற்பங்கள் காணப்படுகின்றன இவர்களில் ஒருவர் வலக் கையினாலே மேளம் அடித்துக்கொண்டு பக்கவாத்தியம் வாசிக்கின்றார் மற்றவர் கையினாலே மேளத்தை சற்று தூக்கி உள்ளார் மேலும் அவருடைய கழுத்திலே கட்டி தொங்க விடப்பட்டுள்ளது இடது பக்கத்தில் உள்ள இசைக்கலைஞர் கஞ்சிரா அல்லது சல்லாரி வாசிக்கின்ற சிற்பம் காணப்படுகின்றது. மேலும் சுசீந்திர கோயிலில் மத்தளம் பம்பை செண்டை குடமுழா போன்ற தோற்கருவி சிற்பங்களும் காணப்படுகின்றன. தாராசுர கோயில் யானை மீது அமர்ந்து மத்தளம் இசைக்கின்ற காட்சியும் மேலும் பல தோற்கருவிகள் வைத்து இசைக்கின்ற காட்சியும் காணப்படுகின்றன.

திருவட்டார் ஆதிகேசவப் பெருமாள் கோயில் மண்டபத்தில் சிவதாண்டவக் காட்சியும் நந்திகேஸ்வர பெருமான் குடமுழா பயில்வதும் மகாவிஸ்ணு பாடகம் எனும் இசைக்கருவி பயில்வதும் பிரமா வீணை வாசிப்பதும் பூதகணங்கள் தாளம் போடும் காட்சி சிற்பமாக காணப்படுகிறது. மதுரை மீனாட்சி கோயிலில் நடராஜ சந்நிதியில் இசைக்கருவிகளுக்கு அன்றி தாளங்களை குறிப்பிடும் 35 சக்கர வடிவில் காண்பிக்கும் சிற்பம் காணக்கூடியதாக உள்ளது மீனாட்சி கல்யாண காட்சியிலே நந்திகேஸ்வரர் மிருதங்கமும் பூதகணங்கள் சங்கு கருவியையும் இசைக்கின்ற காட்சியும் காணப்படுகின்றது.

திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் சிதம்பரம் போன்ற கோவில்களில் பலவித தோற்கருவிகளும் சிற்பங்களும் பாணாசுரன் பஞ்சமுக வாத்தியமும் இசைக்கும் காட்சியும் காணப்படுகின்றது கன்னியாகுமரி வடுவீஸ்வரர் கோயிலில் விநாயகப் பெருமான் பெண் உருவில்

வீணை கருவியை இசைக்கும் சிற்பம் காணப்படுகின்றது. மேற்கூறிய சிற்பங்களில் அமைப்பானது இறைவனுக்கு மக்களுக்கும் இடையேயான இணைவினை ஏற்படுத்தியுள்ளது கைகளால் தட்டி தாளத்தை காண்பித்தல் கிபி ஐந்தாம் நூற்றாண்டில் இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. முதன்முறையாக குகைகளில் காணப்படுகின்றன இதைத் தொடர்ந்து ஆணிகள் முதலியவற்றால் வாத்தியத்தை அடித்து தாளம் போடும் மரபு வந்திருக்கிறது.

இரண்டாம் இராஜராஜன் காலத்து தாராசுரக் கோயிலில் உடுக்கையுடன் சிவனார் தோற்றம் உடைய சிற்பம் காணப்படுகின்றது. இந்த சிற்பம் தற்போது தஞ்சாவூர் அருங் காட்சியகத்தில் உள்ளது. இந்த சிற்பத்தினை அவதானிக்கும் போது வாத்திய இசையினை இறைவன் விரும்பி வாசித்து இருக்கின்றார் என்பதனை அவதானிக்க முடிகின்றது. தஞ்சை பெருவுடையார் கோயில் விமானத்தின் தென்பக்கத்தில் பல்வேறு கருவிகளின் இசையோடு ஆடல் புரியும் சிவனார் சிற்பக் காட்சி காணப்படுகின்றது. சோழ மன்னன் இரண்டாம் இராஜராஜன் கால தாராசுர கோயிலில் சிவகணங்கள் தாளவிசை கருவிகளை இசைக்கும் சிற்பங்கள் காணப்படுகின்றன. கும்பகோணம் சாரங்கபாணி கோயில் கோபுர கரண சிற்பக் கூடத்தில் தாண்டவ நடனத்திற்கு; தாளமும் சேர்ந்திசைக்கும் காட்சி காணப்படுகின்றது. கும்பகோணம் சாரங்கபாணி கோயில் கோபுர கரண சிற்பக் கூட்டத்தில் வீணை இசைக்கு ஆடும் இறைவனார் இரண்டாம் இராஜராஜ சோழன் காலத்தில் தாராசுரம் ஜெராவதேஸ்வரர் கோயில் பலிபீட மண்டபத்தில் கருங்கல்லான இசை படிகள் ஆடல் மகளுக்கு பக்க இசையாக துடியும் வீணையும் இசைக்கப்படும் சிற்பம்; இந்தச் சிற்பம் சிதம்பரம் நடராஜர் கோயிலில் காணப்படுகின்றது. தாளக் கருவியோடு வீணை இணைந்து இசைக்கும் இக்காட்சி சிதம்பரம் நடராஜர் கோயில் ஆடல் மகளிர் சிற்பக்கூடத்தில் உள்ளது.

தாராசுரம் ஜராவதேஸ்வரர் கோயில் மேற்கு திருச்சுற்று வெளிப்புற மதில் சிற்பக்கூடத்தில் ஆடல் மகளிர்களுக்கு பக்க இசையாக குழலும் வீணையும் காணப்படுகின்றது. பக்க இசையாக வீணை இசைக்கும் இக்காட்சி சிதம்பரம் நடராஜர் கோயில் உள் திருச்சுற்று ஆடல் மகளிர் சிற்ப நிரலில் காணப்படுகின்றது. சிதம்பரம் நடராஜர் கோயில் ஆடல் மகளிர் சிற்ப நிரலில் குழலும் வீணையும் இணைந்து இசைக்கின்றன. குழலை முகத்திற்கு இடப்பக்கமாக பிடித்தும் வீணை கருவியை தோளில் தொங்கவிட்டு நின்றபடியும் இசைப்பதை காணலாம். கும்பகோணம் திருநாகேஸ்வரர் கோயில் கருவறை விமானத்தில் வீணை இசைக்கு மகளிர் ஆடும் அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. குழல் வீணை ஆகிய பண்ணிசை கருவிகளோடு குமிழ்த் தாளமும் தட்டையான தாளமும் துடியும் இணைந்து இசைக்கப்படுகின்றன. இது தாராசுரம் ஜராவதேஸ்வரர் கோயில் மேற்கு திருச்சுற்ற வெளிப்புற மதலின்; அடித்தளத்தில் ஆடலுக்கு இசை வழங்கும் பல்லியக் கூட்டிசை சிற்பமாக காணப்படுகின்றது மாமல்லபுரம் தருமராசர் ஒற்றைக்கல் கோயில் விமானத்தில் சிவனார் நின்றபடி வீணை இசைக்கும் சிற்பம் காணப்படுகிறது. பாம்பின் தலை போல் அமைந்த நீண்ட பெரிய வீணையை முழங்காலை மடக்கி நின்று வாசிக்கும் சிற்ப தோற்றம் இது தஞ்சாவூர் பெரிய கோவில் அருங்காட்சியகத்தில் உள்ளது.

சிதம்பரம் நடராஜர் கோயிலில் ஆடலுக்கு வீணை இசை தரும் மங்கையின் சிற்பத் தோற்றமும் வீணையின் குடம் தண்டு யாழ்முகம் மட்டும் ஆகியவை தற்கால வீணையை ஒத்து காணப்படினும் இது கைவிரல்கள் நரம்புகளில் பயிலும் முறை வேறுபட்டு காணப்படுகின்றது. சிதம்பர நடராஜர் கோயில் உள் சுற்று ஆடல் மகளிர் சிற்பக் கூட்ட நிழலில் தாளமிசைத்து பாடும் மகளீர்களுக்கு பக்க இசையாக வயலின் போன்ற நரம்பு கருவியை இசைக்கும் காட்சியாகக் காணப்படுகின்றது. கும்பகோணம் திருநாகேஸ்வரர் கோயில் கருவறை விமான சிற்பத் தொடரில் உள்ள கணங்கள் ஆடிப் பாட இசை பெருக்கும் மிக நீளமான குழல் காணப்படுகின்றது. சிதம்பரம் நடராஜர் கோயில் உள் சுற்று ஆடல் மகளிர் சிற்ப நிழலில் திமிரி நாகசுரமாக சொல்லத்தக்க காற்று கருவி இசையும் குமிழித்தாளமும்; பக்க இசையாக அமையும் காட்சி காணப்படுகின்றது.

தஞ்சை பெரிய கோயிலில் தற்கால நாகசுர கருவி போன்று இரண்டு ஊது கருவிகள் தாளம் மத்தளம் ஆகிய கருவிகளுடன் இணைந்து ஆடுபவர்களுக்கு பக்க இசையாக வழங்கும் காட்சி காணப்படுகின்றது சிதம்பர நடராஜர் கோயில் உள்ள உள் சுற்று ஆடல் மகளிர் சிற்ப நிரலில் மத்தளத்தோடு இணைந்து ஆடலுக்கு இசை வழங்கும் ஊது கருவி இது முகவினையாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது தஞ்சாவூர் பெரிய கோயில் விமான உள் திருச்சுற்றில் உள்ள சிவனாரின் கரணத் தோற்றங்களில் ஒன்று இச்சிற்பத்தொடரில் பூதகணங்கள் தாள கருவிகள் கொட்ட காணலாம் சிதம்பரம் நடராஜர் கோயில் தெற்கு கோபுர கரண சிற்பத்துடன் மத்தளம் இசைக்கும் தாள ஒலிக்கும் ஆடும் ஆடல் மகளீர் தோற்றமும் காணப்படகின்றது. தஞ்சை பெரிய கோயிலில் தண்ணுமை கருவி இசைக்கு ஆடவர்கள் உற்சாகமாக ஆடும் சிற்பக்காட்சி காணப்படுகிறது ஆடல் ஆசானும் தண்ணுமையாளனும் ஒயிலாக ஆடும் ஆடல் மகளும் காணப்படுகின்றது. சிதம்பர நடராஜர் கோயில் ஆயிரங்கால் மண்டப ஆடற் சிற்பத் தொடரில் தன்னுமையும் மத்தளம் தாளமும் ஒலிக்க ஆடும் ஆடல் மங்கையின் தோற்றம் காணப்படுகின்றது. ஆடல் ஆசான் நெறிப்படுத்த துடிக்கருவியின் நுட்பமான ஜதி கோவை கோர்வைகளுக்கு நளினமாக ஆடும் ஆடல் மங்கையின் தாராசுரம் ஜராவதேஸ்வரர் கோயில் சிற்பத் தோற்றம் காணப்படுகின்றது. இது தஞ்சாவூர் அருங்காட்சியகத்தில் காணப்படுகின்றது.

கடினமான காரண நிலைகளை மிக அழகாக ஆடும் நங்கையின் ஆடலை குமிழான தாள கருவியை நுட்பமாக ஒலித்து நெறிப்படுத்தும் ஆடலாசான் தாராசுரம் ஜராவதேஸ்வரர்; கோயில் ஆடல் சிற்பத்துடன் காணப்படுகின்றது. தஞ்சாவூர் பெரிய கோயில் விமான ஆடல் சிற்ப தொகுதி வீணை இசைப்போரும் தாளம் இசைப்போரும் ஆடுபவர் ஒன்று சேர்ந்து ஆடியபடி கருவிகளை இசைப்பதை காணலாம்

முடிவுரை.

சிற்பங்களில் இசையின் முக்கியத்துவம் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கின்றது. முற்காரத்தில் வாழ்ந்த மன்னர்கள் தங்கள் வாழ்க்கை முறைகளோடு தொடர்புபட்ட கலைகளை தெளிவாக சிற்பங்களின் ஊடாக வெளிக் கொண்டு இருக்கின்றனர். வாழ்க்கை முறையில் மக்களுக்கும் இசைக்கும் உள்ள தொடர்பு சிற்பங்களின் ஊடாக நாம் காணமுடிகின்றது. இசை என்பது மனதினை ஆறுதல்படுத்தும்

கருவியாக மட்டும் இல்லாமல் பிணி தீர்க்கும் மருந்தாகவும் காணப்படுகின்றது. இந்த ஆய்வில் ஒவ்வொரு காலப்பகுதியிலும் வாழ்ந்த மன்னர்கள் அவர்களின் கலை ஆர்வம் ஆராயப்பட்;டுள்ளது. இந்த ஆய்வின் படி முற்காலத்தில் பரிணாம வளர்ச்சியில் இசை வளர்ந்து கொண்டிருந்தது. வேவ்வேறு வாத்தியங்கள் இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டு இன்று அழிந்து காணப்படுகின்றது. சில கருவிகள் வடிவங்கள் மாறி காணப்படுகின்றது. மக்களின் வாழ்வில் இசை முக்கிய பங்கிளை வகிக்கின்றது என்பது அனைத்து தரப்பினரும் உணரவேண்டும். முற்காலத்திலும் சரி தற்காலத்திலும் சரி இனி வரும் காலத்திலும் இசை என்பது வாழ்வில் இணைந்து காணப்படவேண்டும்.

உசாத்துணை நூல்கள்

01. ஆசிரியர் - கோவிந்தராசனார்.சி
ஆண்டு – 1982
கல்வெட்டுக்களில் இசை
தமிழ் ஆசிரியர் மன்றம் அண்ணாமலை நகர்.
02. ஆசிரியர் - ஞானா குலேந்திரன். சி
ஆண்டு – 1990
பழந்தமிழர் இசை
வீரா பதிப்பகம் இலங்கை
03. ஆசிரியர் - தண்டபாணி.சி
ஆண்டு – 1993
திராவிடர் இசை
பாவனார் பதிப்பகம்
04. ஆசிரியர் - பெருமாள். மி
ஆண்டு – 1984
தமிழர் இசை
மெய்ப்பொருள் அச்சகம்.
05. ஆசிரியர் - ராகவன்
ஆண்டு – 1998
தென் இந்திய சிற்பங்கள்
ராமர் பதிப்பகம். இலங்கை